SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING 073

# FIRST EXAMINATIONS IN BACHILOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2011/2012

HELD IN APRIL / MAY 2013

## BBA 14 (II) – MACRO ECONOMICS

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம் : 03 மணித்தியாலங்க

01. பின்வரும் எண்ணக்கருக்களை சுருக்கமாக விளக்குக.
    - (i) தன்னிச்சையான நுகர்வு.
    - (ii) பணவீக்கமும் பணச்சுருக்கமும்
    - (iii) பொருட் சந்தையும் பணச்சந்தையும்.
    - (iv) சிற்றினப் பொருளியலும் பேரினப் பொருளியலும்
    - (v) சேயின் சந்தை விதி.
    - (vi) எல்லை சேமிப்பு நாட்டம்.
    - (vii) நுகர்வின் அடிப்படை விதி.
    - (viii) மூன்று துறைப் பொருளாதாரம்.
    - (ix) தன்னிச்சையான முதலீடும் தூண்டப்பட்ட முதலீடும்.
    - (x) வேலையின்மையும் கீழுழைப்பும்.

(10 X 2 = 20 புள்ளிகள்)

02.

(அ) நுண்ணினப் பொருளியலிலிருந்து பேரினப் பொருளியலை வேறுபடுத்துக.

(04 புள்ளிகள்)

(ஆ) பேரினப் பொருளாதாரத்தின் நோக்கத்தினை அடைவதிலுள்ள பிரச்சினைகளை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

(இ) பேரினப் பொருளாதார நோக்கத்தினைத் தருக. அவ் ஒவ்வொரு நோக்கத்தினையும் இலங்கையின் கடந்த கால தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்க.

(10 புள்ளிகள்)

03

அ) பணவீக்கம் என்பதன் மூலம் நீர் யாது விளங்கிக்கொள்கிறீர்?

(05 புள்ளிகள்)

ஆ) பணவீக்கத்தினால் ஏற்படும் தாக்கம் குறித்து கருத்துரைக்குக.

(07 புள்ளிகள்)

ஆ) பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து விளக்குக.

(08 புள்ளிகள்)

04 (அ) பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

| வருமானம் | நுகர்வு | சேமிப்பு | APC | வருமான மாற்றம் | நுகர்வு மாற்றம் | MPC |
|---|---|---|---|---|---|---|
| 0 | 40 | ----- | ----- | ----- | 80 | 0.8 |
| 100 | ---- | -20 | 1.2 | 100 | ---- | 0.8 |
| ---- | 200 | 0 | 1.0 | ------ | 80 | 0.8 |
| 300 | ----- | ----- | 0.93 | 100 | 80 | ---- |
| 400 | 360 | 40 | ---- | 100 | ---- | 0.8 |

(08 புள்ளிகள்)

(ஆ) ஒரு திறந்த பொருளாதாரத்துடன் தொடர்புடைய தகவல்கள் உமக்கு தரப்படுகின்றன.
(எல்லாப் பெறுமதிகளும் மில்லியன் ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)

வருமானம் 600,
வரவு செலவுத்திட்ட குறைநிலை 30,
இறக்குமதிகள் 60,
முதலீடு 50,
எல்லை நுகர்வு நாட்டம் 0.8,
ஏற்றுமதிகள் 50,
சராசரி சேமிப்பு நாட்டம் 0.1,
வரி வருமானம் 60.

பின்வருவனவற்றை காண்க.

(i) மேற் குறிப்பிட்ட பொருளாதாரத்தில் மொத்த தேசிய உற்பத்தியை 1010 மில்லியனாக அதிகரிக்க, அரசு தன் செலவை அதிகரிக்குமானால் அரச செலவுகளின் மொத்த அளவு என்ன ?

(06 புள்ளிகள்)

(ii) தனியார் முதலீடுகளில் 80% வீழ்ச்சி தேசிய வருமானத்தில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் ?

(06 புள்ளிகள்)

05. (அ)

i. ISவளையிஎன்பதனால் கருதப்படுவது யாது?

(03 புள்ளிகள்)

ii. LMவளையிஎன்பதனால் கருதப்படுவது யாது?

(03 புள்ளிகள்)

iii. IS - LMசமநிலைஎன்பதிலிருந்துநீர் யாது விளங்குகின்றீர்?

.(02புள்ளிகள்)

iv. IS – LMசமநிலையில் பணவிரிவாக்கத்தினுடையதாக்கத்தினை விளக்குக?

(02புள்ளிகள்)

(ஆ) பின்வரும் சமன்பாடுகள் அரசாங்கத் தலையீடற்றஒரு மூடப்பட்டபொருளாதாரம் ஒன்றின் தகவல்களாகும்.

(தகவல்கள் அனைத்தும் மில்லியன் ரூபாவில் தரப்பட்டுள்ளது.)

| | |
|---|---|
| நுகர்வுச் சார்பு(C) | $= 100 + 0.8y$ |
| முதலீட்டுச் சார்பு(I) | $= 150 - 6r$ |
| பணத்தின் கேள்விச் சார்பு(L) | $= 0.2y - 2r$ |
| பணநிரம்பல் | $=150$ |

பின்வருவனவற்றைக் கணிக்குக.

i. IS சமன்பாடு (02புள்ளிகள்)

ii. LM சமன்பாடு (02புள்ளிகள்)

iii.பொதுச் சமநிலையில் வருமான,வட்டிவீதம் (02புள்ளிகள்)

iv. பொதுச் சமநிலைவருமானமட்டத்தில் நுகர்வு,முதலீடு (02புள்ளிகள்)

v. IS, LMவளையிகளைஒருவரைபில் காட்டுக. (02புள்ளிகள்)